செ.வெ.எண். 71/மார்ச் தேதி : 31.03.2017

**தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்யத்திற்குட்பட்ட தொட்டார்தனஅள்ளி கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி 2016-17ம் ஆண்டு திட்டத்தின்கீழ் மாற்று ஆழ்துளை கிணறு, மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் பணியினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.**



தருமபுரி மாவட்டத்தில் நிலவும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சனைக்கு உடனுக்குடன் தீர்வுகாணும் வகையில் 24 மணி நேரம் செயல்படும் 1077 கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்களின் அடிப்படையில் களஆய்வு மேற்கொண்டு தேவை அடிப்படையில் புதிய குடிநீர் திட்ட பணிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 32 கிராம ஊராட்சிகளிலும் முழுவதுமாக குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய தேவையான அடிப்படையில் ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துதல், கைப்பம்புகள் அமைத்தல், பைப்லைன் அமைத்தல் மற்றும் நீட்டித்தல் பணிகளை தேர்வு செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டினை போக்கும் விதமாக ரூ. 102.690 இலட்சம் மதிப்பீட்டில் 42 ஊராட்சி ஒன்றிய பொது நிதி பணிகளும், ரூ. 6.500 இலட்சம் மதிப்பீட்டில் 2 மாநில பேரிடர் நிவாரண நிதி பணிகளும் மற்றும் ரூ. 69.100 இலட்சம் மதிப்பீட்டில் 33 ஊரக உள் கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலும் என மொத்தம் ரூ. 178.29/- இலட்சம் மதிப்பீட்டில் 77 பணிகள் நடைபெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. ஆய்வின்போது ஆழ்துளை கிணற்றின் மேல் பகுதியில் குழாயில் ஆழம் குறித்த விவரத்தினை பதிவு செய்யவும் அறிவுறுத்தினார். மேலும் இரவு நேரங்களில் ஒளிரும் வகையில் பைப்லைனில் மேல் பகுதியில் ஒளிரும் ஸ்டிக்கர் பொருத்த அறிவுரை வழங்கினார். மேலும் முக்கியமான சந்திப்புகளில் பொது சொத்துகள் சேதப்படுத்துதல் குறித்த TNPPD சட்டத்தின்கீழ் விளம்பரப்படுத்தவும் அறிவுரை வழங்கினார்.

தண்ணீர் சிக்கனம் குறித்த டுயடிடந பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு விளம்பரம் செய்யுமாறு அறிவுறுத்தினர். மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் மூலமாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கி (CSR Activities) உருவாக்கி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுறுத்தினர். நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்கவும், மேலும், மக்களின் தேவைகேற்ப குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் பொருட்டு மாவட்ட கண்காணிப்பு மைய எண். 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 ஆகிய எண்களின் மூலம் பெறப்படும் புகார்கள் உடனுக்குடன் சரி செய்யுமாறு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பெ. செந்தில்குமார், திரு. என். ராமஜெயம், உதவி பொறியாளர்கள் திரு. க. முருகன், திரு. ஜெ. கீர்த்திவாசன் மற்றும் ஒன்றிய பணி மேற்பார்வையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.